மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினைமீது எனது தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே........

திரு. பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன இது, எழுந்து பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்?

திரு பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லாமல் பேசிக்கொண்டே இருக்கலாமா?

திரு. பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பேசுவது றையல்ல. அவர் பேசியது ஏதாவது காதிலே விழுந்து முருந்தால்கூட நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: ஒரு விஷயத்தை நான் வேதனை யோடு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசி, அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு பேசக் கூடாது அமருங்கள்.

5. கவன ஈர்ப்பு

சென்னை, தேனாம்பேட்டையில் அமைக்கப் பெற்றுள்ள மருத்துவப் பரிசோதனை ஆய்வுக்கூடம் இயங்காமல் இருப்பது குறித்து.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, சென்னை தேனாம்பேட்டையில் 1973-ல் அமைக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை ஆய்வுக்கூடம் இதுவரை இயங்காததால் ஏற்பட் டுள்ள நட்டம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங் அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, கட்டிடம்.—மாதிரி எடுக்கப்படுகின்ற பல மருந்துகளின் தரத்தை ஆராய இம்மாநிலத்தில் ஒரு மருந்து ஆய்வுக் கூடம் அமைக்க 1973 ம் ஆண்டு ஆணை பிறப்பித்ததோடு ரூ. 1 லட்சம் செலவில் கட்டிடத்தின் அஸ்திவாரம் அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்தது.

ஆனால் 1974-ம் ஆண்டு அஸ்திவாரம் கட்டுவதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகையாகிய ரூ. 1 இலட்சத்துடன் தரைத் தளக் கட்டிடம் (ground floor) அமைக்க ரூ. 4 இலட்சமும் சேர்த்து ரூ. 5 இலட்சம் செலவிட அரசு மறு ஆணை பிறப்பித்தது.

மேலும் 1975-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இக்கட்டிடத்தை இரு மாடிக் கட்டிடமாகக் கட்டுவதற்கு கூடுதலாக ரூ. 7 இலட்சம் அனுமதித்தது. ஆனால் நிதியாண்டு 1975-76-ல் ரூ. 6 இலட்சமாக செலவைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆக மொத்தம் ரூ. 12 இலட்சத்திற்கு கட்டிடம் கட்ட 1973—ல் இருந்து 1975 வரை மூன்று அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

முந்தைய அரசு, அவ்வப்போது பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்க, பொதுப்பணித்துறை கட்டிடத்தைக் கட்ட ஆரம்பித்தது, கட்டிடத்தை 1977—ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தான் கட்டி முடித்தது. எனினும் தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவைகளெல்லாம் செய்து முடித்து கட்டிடத்தை சுகாதார இலாகாவிடம் இந்த ஆண்டில் இரண்டு மாதத்திற்கு முன்புதான் ஒப்படைத்தார்கள்.

உபகரணங்கள்: இந்த ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான சிறப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு 1973-ம் ஆண்டு ரூ. 1 இலட்சமும் 1975-ம் ஆண்டு ரூ. 2 இலட்சமும் மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 1 இலட்சமும் அனுமதி வழங்கப்பட்டது. 1977-ம் ஆண்டு கூடுதல் உபகரணங்கள் வாங்குவதற்கு மேலும் ரூ. 3.70 இலட்சமும் மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 1.15 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது.

அவ்வப்போது அரசு பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க கட்டிட வேலையும் உபகரணங்கள், மரச்சாமான்கள் ஆகியவைகள் வாங்குவதும் நிறைவேற்றப்பட்டன.

[திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்] [1979 மார்ச் 31

1977-ம் ஆண்டு உபகரணங்கள் வாங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 3.70 இலட்சத்தில் இன்னும் சுமார் ரூ. 2.51 இலட்சத்திற்கு உபகரணங்கள் வாங்க வேண்டியுள்ளது. அவைகள் வாங்குவதற்கு டெண்டர்கள் கேட்கப்பட்டுள்ளன. இன்னும் ஓரிரு மாதங்களில் எல்லா உபகரணங்களும் வாங்கப்பட்டு விடும்.

பணியாளர்கள் : அடுத்து இந்த ஆய்வுக் கூடத்தில் பணியாற்றுவதற்கு சுமார் 36 பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இவைகளில் அரசுப் பகுப்பாய்வாளர், மற்றும் முதுநிலைப் பகுப்பாய்வாளர் போன்ற சில முக்கியமான பதவிகளுக்கு தற்காலிக நியமனம் செய்வதற்குப் பொது சுகாதார இயக்குநரிடமிருந்து செயற் குறிப்புகள் வந்துள்ளன. ஆனால் இப்பதவிகளுக்கான பணி விதிகள் இன்னும் வரையறுக்கப்படவில்லை. பணி விதிகள் முடிவு செய்வதற்கு அரசியல் சட்டப்படி சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு அரசு பணித்தேர்வு ஆணைக் குழுவின் கருத்தும் கேட்கப்பட்டுள்ளது. இதற்குச் சற்று அவகாசம் தேவைப்படுகிறது. விரைவில் இந்த விதி முறைகள் நிர்ணயிக்கப்பட்டு பணியாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்.

இந்த ஆய்வுக் கூடம் இயங்குவதற்கு வேண்டிய உடனடி வேலைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த மருந்துப் பரிசோதனை ஆய்வுக் கூடம் 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் குறிப்பிலேயிருந்து, 16 இலட்சம் ரூபாய் இன்று வரையில் செலவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் எந்த வேலையும் அங்கே நடக்கவில்லை, அதற்குப் பதிலாக கிங் இன்ஸ்டிடியூட்டில் எல்லா விதமான பரிசோதனைகளும் நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வுக் கூடம் சரியாக இயங்காததற்கான காரணம், சுகாதார மருந்தகமும், மருந்துக் கட்டுப்பாடு அலுவலகமும் பொருத்தமற்ற முறையில் ஒன்றாக இருப்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உரை அல்ல, ஏதாவது சந்தேகம் இருந்தால் மட்டும் உறுப்பினரவர்கள் கேட்க வேண்டும்.

1979 மார்ச் 31]

திரு. செ. சிவசாமி: எஸ்டிமேட் கமிட்டியும் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஹாபியா கமிட்டி 1954 ஆம் ஆண்டில், இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது, போக்கர் கமிட்டி 1964 ஆம் ஆண்டில் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஹாத்தி கமிட்டியும். 1975 இல் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது, மருந்து விசாரணைக் கமிட்டியும் கூட இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது, மத்திய சுகாதார கவுன்சில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நான் அனுமதிக்க இயலாது, 41-வது விதியின் கீழ் கொண்டுவரப்பட்ட விஷயத்தில் இப்படிப் பேசிக் கொண்டே போனால் என்ன செய்வது? சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: அங்கு முக்கியமான புத்தகங்கள் கூட கிடையாது. ஐ.பி.சி. போன்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து மன்னிக்க வேண்டும். இந்த முறையில் சென்றால் அனுமதிக்க முடியாது,

அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (ஆறாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை மகிழ்ச்சியோடு அளிக்கிறேன்.